DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 574/2025
Miscellaneous :
Sessions : PW 3
Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | தியாகராஜன் |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **12.03.2026**

**முதல் விசாரணை**

1.)நான் தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். கடந்த 01.01.2023 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்தீபன் நிலைய பொறுப்பில் இருந்தபோது சுதா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 2/2023 இதச பிரிவுகள் 294(b) 323 324 506(2) மற்றும் 4 of TNPHW Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியாண்டி மற்றும் சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 3 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 06.01.2023 மதியம் 12.00 மணிக்கு உத்தமநல்லூர் காலனி அருகே நின்றிருந்த கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மற்றொரு எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி விமல் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் வழக்கில் காயம் பட்ட சுதா மற்றும் சிவகுமார் விபத்து பதிவேடு வழங்கிய மருத்துவர் மகேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் மேற்படி காயம்பட்ட நபர்களுக்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஜெயபிரியா என்பவரை **விசாரித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (அந்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றுகள் அசாஆ 5 மற்றும் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பின்னர் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b) 323 324 506(2) மற்றும் 4 of TNPHW Act கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

M.T
13/03/2026.

**குறுக்கு விசாரணை**

3. புகாரை பெற்று நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை விசாரிக்காமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காயச்சான்று வழங்கிய மருத்துவரை நான் விசாரித்தேன்.

M. [signature] 13/03/2026.

Type written in my dictation to open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature] 12/3/26

Judicial Magistrate No.II
Madurantakam